மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் எடுப்பதற்காக காவேரி ஆற்றில் barrages அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி காவேரி ஆற்றில் barrages அமைக்கப்பட்ட காரணத்தினால்தான், மேட்டூரிலிருந்து கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் தொலைவிற்கு இருபக்கமும் நிலத்தடி நீர் பெருகி, விவசாயம் அதிகளவில் செய்ய முடிகிறது. ஒன்று விவசாயமும் நன்றாக இருக்கிறது. இரண்டு, மின்சாரம் எடுக்கும் நிலையமும் இருக்கிறது. இதனை உடனடியாகத் தீர்வு செய்ய இயலாது. ஏற்கெனவே கட்டப்பட்ட barrages–ல் தண்ணீர் தேக்கி வைத்தால்தான், மின்சாரம் எடுக்க முடியும். அதைத் தேக்காமல் விட்டால், மின்சாரம் எடுக்க இயலாது. அப்படியே அந்த நீர் ஓடினால் நல்ல நீர் வரும் என்று சொல்கிறீர்கள். மேலும், நல்ல நீராக வருவதற்கு சுத்திகரிப்பு நிலையத்தை மேலும் விரிவுபடுத்தி, நல்ல நீர் தருவதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 23 முதல் 28 வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. ஆ. கிருஷ்ணசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர் அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 14 முதல் 19 வரையிலான 6 அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.